RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2157

OPEN ACCESS

# இனவரைவியல் நோக்கில் 'மீன்காரத் தெரு' புதினம்

**க. லெட்சுமி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை-625002, தமிழ்நாடு, இந்தியா.

# Ethnographic Prespective of the Novel 'Meenkaara Theru'

**G. Lakshmi** [a, *]

[a] Department of Tamil, Lady Doak College, Madurai-625002, Tamil Nadu, India

* Corresponding Author: glakshmi@ldc.edu.in

Received: 19-08-2022
Revised: 15-10-2022
Accepted: 23-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

Ethnography is a tool for identifying the people belonging to a particular society and a particular ethnic group. This article is an ethnographical study of the Muslim people in 'Meenkara Theru' written by 'Keeranur Zakirraja'. This article overall examines the basic needs of the Muslim people such as the food they eat, the clothes they wear, the things they carry, their living arrangements, the accessories they use, the customs, beliefs, rituals they follow, the way they worship God, the problems they face, the divisions found among them, occupations, their administrative system, the status of women and so on. In this way, it can be said that this article identifies the unique characteristics of the Muslim people.

**Keywords:** Ethnography, Meenkara Theru, Keeranur Zakirraja, Society

## முன்னுரை

மதம் சார்ந்த குழுவாக இசுலாமிய சமயம் விளங்குகிறது. இக்குழுவைச் சேர்ந்த மக்களின் வாழ்வில் பக்திநெறி இன்றியமையாததாகப் பின்பற்றப்படுகிறது. இம்மக்களுடைய உணவு, உடை, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள் அனைத்தும் பக்திநெறியோடு ஒன்றியனவாகத் திகழ்கின்றன. அவ்வகையில் 'கீரனூர் ஜாகிர் ராஜா' எழுதிய 'மீன்காரத் தெரு' புதினம் இருவேறுபட்ட இசுலாமிய மக்களைக் காட்சிப்படுத்துகிறது. 'இசுலாம்' என்கிற ஒரே வட்டத்திற்குள் இசுலாமிய மக்கள் காணப்பட்டாலும் அவர்களுக்குள்ளும் பல பிரிவுகள் உள்ளன என்பதையும், ஏற்றத்தாழ்வுகள் உள்ளன என்பதையும் இப்புதினத்தின்வழி ஆசிரியர் பதிவு செய்கிறார். எனவே 'கீரனூர் ஜாகிர் ராஜா' எழுதிய 'மீன்காரத் தெரு' புதினத்தின்வழி இசுலாமிய மக்களை 'இனவரைவியல்' நோக்கில் ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

## இனவரைவியல்

"இனவரைவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப் பற்றி எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகிறது. ஒரு இனக்குழுவைப் பற்றிய முழுமையான படிப்பு என்னும் வகையில் இப்பிரிவை 'இனக்குழுவியல்' என்றும் கூறலாம்" ன்கிறார் பக்தவத்சல பாரதி (Bhakthavachala Bharathi, 1990). ஆக, ஓர் இனத்தை அல்லது குழுவை 'பண்பாடு' சார்ந்து ஆராய்வது 'இனவரைவியல்' எனப்படுகிறது.

## அடிப்படைத் தேவைகள்

மனிதனின் அடிப்படைத் தேவைகளாவன உணவு, உடை, இருப்பிடம் ஆகும். இந்த அடிப்படைத் தேவைகளின்வழி ஓர் இனம் அடையாளப்படுத்தப்படுகின்றது.

## உணவு

தத்தம் இனத்தைச் சார்ந்து, சூழலைச் சார்ந்து ஒவ்வொரு குறிப்பிட்ட இனமக்களின் உணவுப் பழக்கவழக்கமானது மாறுபடுகிறது. இசுலாமிய மக்கள் சைவ உணவை விட, அசைவ உணவிற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

## உடை

இசுலாமிய ஆண்கள் வீட்டில் இருக்கும் போதும், அன்றாட நிகழ்வுகளின் போதும் கைலி, பனியன் போன்ற உடைகள் அணிகின்றனர். 'மீன்காரத் தெரு' புதினத்தில், மீன்காரத் தெருக்காரனான பதுருதீன் முடிதிருத்தும் கடைக்குச் செல்லும்போது கைலி அணிந்திருக்கிறான். "அதைவிடவும் பரந்த பெரிய கண்ணாடியில் எக்கி குதித்து தன் முகம் பார்க்கத் துடித்த பதுருதீனுக்கு கைலி அவிழ்வதுகூடத் தெரியாது" (Keeranur Jaaheeraja, 2012) வயதானவர்கள் தோளில் ஒரு துண்டு அல்லது சால்வையுடன் காணப்படுகின்றனர். இப்புதினத்தில், ஷேக்கத்தா தன் பேரனை மகிழ்விக்கக் குளத்திற்குக் கூட்டிச் செல்கிறார். அப்போது அவர் தோளில் சால்வை அணிந்திருக்கிறார். "தோளில் கிடந்த மக்கத்துச் சால்வையில் ஆஜாத்தின் தலையைத் துவட்டினார் ஷேக்கா" என்ற வரிகள் இதனை விளக்குகின்றன (Keeranur Jaaheeraja, 2012).

## புழங்குபொருட்கள்

இசுலாமிய மக்களின் புழங்குபொருட்களாகக் கோரைப்பாய், தலையணை போன்றவை உள்ளன. 'மீன்காரத் தெரு' புதினத்தில், ஆயிஷா வீட்டிற்கு அவள் பள்ளித் தோழியான ஆமினா வரும்போது, ஆயிஷாவின் வீட்டில் தலையணை, பாய் போன்றவை கிடப்பதைக் காண்கிறாள். "ஆயிஷாவோட அம்மா கோரைப்பாய் விரிச்சு ஒரு மூலையில் சுருண்டு கிடந்தா. அது வச்சிருந்த தலகாணி கிழிஞ்சு உள்ளயிருந்த பஞ்சு வீடெல்லாம் பரவிக் கிடந்துச்சு", "வாசலில் விசேஷமான கோரைகளில் பின்னப்பட்ட பாயும் அதன்மீது தலையணைகள் இரண்டும் கிடந்தன" என்ற வரிகள் இதனை எடுத்தியம்புகின்றன (Keeranur Jaaheeraja, 2012).

## அணிகலன்கள்

'மீன்காரத் தெரு' புதினத்தில் பங்களாத் தெருக்காரரான ஹனீபா, தன் மகள் ஆயிஷா பிறந்தபோது அவளுக்குப் பலவகையான அணிகலன்களை அணிவித்து அழகு பார்க்கிறார். "பொறந்து ஒரு வயசுல அவள அவங்கத்தா தங்கத்தால மொழுகியிருந்தாரு. நெத்திச்சூடி, கொப்பி, சின்ன அரசள்வாளி, நெடுங்கழுத்து செயினு, மைனர் செயினு, மோதரம்னு அத்தினி நகையோட எடுத்த போட்டோவ எங்கிட்ட காட்டுவா." சுலாமியப் பெண்களின் அணிமணிகள் இப்புதினத்தில் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது (Keeranur Jaaheeraja, 2012).

## வழிபாடு

இசுலாமிய மக்கள் தினமும் ஐந்து வேளை இறைவனைத் தொழுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். இந்தத் தொழுகைகளில் வெள்ளிக்கிழமைத் தொழுகையானது 'ஜூம்ஆ தொழுகை' எனப்படுகிறது. இப்புதினத்தில், "இவள் மறுமொழி nhhல்வதற்குள் "ஓம் மகள நாளைக்கி அனுப்பிவை. வெள்ளிக்கிழமை ஜூம்ஆ முடிஞ்சு வந்து சேரட்டும்..." என்கிற அதிகாரக் குரலுடன்

அம்பன் வண்டி நகர்ந்தது" என்னும் வரிகள் ஆமினாவை பங்களாத் தெருவிற்கு ஜும்ஆ தொழுகை முடிந்தவுடன் வேலைக்கு அனுப்புமாறு முதலாளியம்மா, ஆமினாவின் தாய்க்குக் கட்டளையிடுவதிலிருந்து காண முடிகிறது (Keeranur Jaaheeraja, 2012).

## பழக்கவழக்கங்கள்

ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தனித்துவமான பழக்கவழக்கங்கள் உள்ளன. "மக்களுடைய அன்றாட வாழ்வின் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளுமே காலப்போக்கில் நாகரீகப் பண்பாட்டுச் செயல்முறைகளாக மாறிவிடுகின்றன" என்கிறார் அ. கந்தசாமி (Kandhasamy, 2013). இதன்வழிப் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும் பண்பாட்டை வெளிப்படுத்தும் காரணிகளாக விளங்குகின்றன என்பதை அறிய முடிகிறது.

'மீன்காரத் தெரு' புதினம் காட்டும் இசுலாமிய மக்களிடையே அத்தர் பயன்படுத்தும் பழக்கம் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது. மேலும் வெற்றிலை போடும் பழக்கம், புகைபிடிக்கும் பழக்கம், சூதாடும் பழக்கம் போன்றவையும் இசுலாமிய மக்களிடையே காணப்படுவதாக ஆசிரியர் 'கீரனூர் ஜாகிர்ராஜா' புதினத்தில் பதிவு செய்கிறார்.

## சடங்குகள்

### பிறப்புச்சடங்கு

'மீன்காரத் தெரு' புதினத்தில் காசிம், ரஜியா தம்பதியருக்கு ஓர் ஆண்குழந்தை பிறக்கிறது. உடனே, மோதினார் வந்து குழந்தையின் நாவில் 'சேனைத்தண்ணீர்' தொட்டு வைக்கிறார். "மோதினார் குழந்தையின் காதுகளில் 'அல்லாஹ் அக்பர்' என்று பாங்கு சொல்லி சின்ன வாயில் கொம்புத் தேனைத் தடவினார்" ன்பதன் மூலம் பிள்ளை பிறந்தவுடன் சேனைத்தண்ணீர் தொட்டு வைக்கும் சடங்கு இசுலாமிய மக்களால் செய்யப்படுவதை அறியமுடிகிறது (Keeranur Jaaheeraja, 2012).

### திருமணச்சடங்கு

இசுராமிய மக்களின் திருமணமானது 'நிக்காஹ்' புத்தகத்தில் பதிவு செய்யப்படுகிறது. மாப்பிள்ளை வீட்டார் 'மஹர்' கொடுப்பது கட்டாயமாகக் கருதப்படுகிறது. திருமணத்தின் போது மணமகளின் கழுத்தில் கருகமணி அணிவிக்கப்படுகிறது. உறவினர் அனைவருக்கும் பிரியாணி விருந்தும் வழங்கப்படுகிறது. இப்புதினத்தில் வரும் பங்களாத் தெரு முதலாளி தம்முடைய சொந்தச் செலவில் 7 இலவசத் திருமணங்களை நடத்துவதாக அறிக்கை விடுகிறார். அவ்வறிக்கையில் கருகமணி அணிவிப்பதாகவும், சீர்வரிசை வழங்குவதாகவும், பிரியாணி உணவு வழங்குவதாகவும் அறிவிக்கிறார். "ஒவ்வொரு மணப்பெண்ணுக்கும் கருகமணி தாயத்துடன் ஐந்து பவுன் நகையும் சீர்வரிசையும் கூட பெரியவர் தயாள மனத்துடன் தருவதாக ஒப்புக்கொண்டார். பள்ளிவாசல் மண்டபத்தில் ஒரு பகல் வேளையில் நிக்காஹ் எழுதி வந்திருப்பவர்களுக்கு பிரியாணி விருந்தும் தருவதற்கு ஏற்பாடாகி கொண்டிருந்தது" என்ற வரிகள் இதனை எடுத்தியம்புகின்றன (Keeranur Jaaheeraja, 2012).

### இறப்புச்சடங்கு

இசுலாமிய மக்களுள் ஒருவர் இறந்தால் உடனே அவ்விறப்புச் செய்தி பள்ளிவாசலுக்குத் தெரிவிக்கப்படுகிறது. 'மீன்காரத் தெரு' புதினத்தில் வரும் 'பாத்தக்கா' என்ற பெண் தற்செயலாக இறந்துவிடுகிறாள். "மௌத் சேதியை பள்ளிவாசலுக்குச் சொல்லிவர சேட்டு ஓடினான்" (Keeranur Jaaheeraja, 2012) இறப்புச் செய்தியைக் கேட்டவுடன் அதைச் சொல்லச் சேட்டு பள்ளிவாசலுக்கு ஓடுவதைக்

காண முடிகிறது. மேலும், இறந்த உடலின் கடைசி முகம் பார்க்கும் சடங்கு 'தீதார்' எனப்படுகிறது. பிறகு அந்த உடல் சந்தூக்கில் தூக்கிச் செல்லப்பட்டு கபரஸ்தானில் புதைக்கப்படுகிறது.

## தொழில்

மீன்காரத் தெரு இசுலாமியர்கள் மீன் விற்கும் தொழில் செய்பவர்களாகவும், பங்களாத் தெரு இசுலாமியர்களுக்குப் பணிவிடை செய்பவர்களாகவும் காணப்படுகின்றனர். இதனாலேயே இவர்கள் வசிக்கும் தெருவானது 'மீன்காரத் தெரு' என்று அழைக்கப்படுகின்றது. வெளிநாடு அல்லது வெளியூர்களுக்குச் சென்று வியாபாரம் செய்பவர்களாகப் பங்களாத் தெருவில் வசிக்கும் இசுலாமியர்கள் காணப்படுகின்றனர்.

## "மீன்காரத் தெரு' புதினம் காட்டும் பெண்களின் நிலை

மீன்காரத் தெருவில் வசிக்கும் இசுலாமியப் பெண்கள் குடும்ப வறுமையின் காரணமாகப் பங்களாத்தெருவில் வசிக்கும் முதலாளிமார்களின் வீடுகளுக்கு வேலைக்குச் செல்கின்றனர் அல்லது பங்களாத்தெரு முதலாளிமார்களின் அழைப்புக்கிணங்கப் பணிக்கு வர வேண்டியது மீன்காரத் தெருப் பெண்களுக்கான கடமையாகவும் கருதப்படுகிறது. இப்படியாக அழைத்துச் செல்லப்படும் பெண்கள் தங்கள் இளமைக்காலம் முழுவதும் பங்களாத் தெருவிலேயே கழிக்கின்றனர். மேலும் இப்பெண்கள் முதலாளிமார்களின் எல்லாவிதச் சுரண்டல்களுக்கும் ஒத்துப்போக வேண்டிய கட்டாயமும் உள்ளது. "அழைத்துச் செல்ல காரணமில்லாதது போலவே அவள் திருப்பி அனுப்புவதற்குக் காரணம் சொன்னதில்லை. யாரும் எதுவும் கேட்டுக்கொண்டதில்லை. மீறிக்கேட்டால் வசை விழும். அடுத்த முறை பங்களாத் தெருவுக்குக் குண்டான எடுத்துக் கொண்டு போனால் காரியம் நடக்காது. வறுமை அவர்களை கேள்வி கேட்க விடாமல் தடுத்தது" (Keeranur Jaaheeraja, 2012) எவ்வளவு தான் இன்னல்களை அனுபவித்தபோதும், மீன்காரத் தெரு இசுலாமியரால் பங்களாத் தெருவினரை எதிர்த்துக் கேள்வி கேட்க முடியாதநிலையிலேயே உள்ளனர் என்பதை இப்புதினம் புலப்படுத்தியுள்ளது.

## முடிவுரை

ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த மக்களின் பண்பாட்டு அடையாளங்களை ஆராய்வதில் 'இனவரைவியல்' குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது. "ஓர் இனத்தின் வரையறை என்பது அவர்கள் உண்ணும் உணவிலிருந்து அவ்வினத்திற்கே உரிய பிரச்சினைகள் வரை அனைத்தையும் உள்ளடக்கியது. அவ்வகையில் ஜாகிர் ராஜாவின் 'மீன்காரத் தெரு' புதினத்தின்வழி இசுலாமியரின் இனவரைவியலை இக்கட்டுரை ஆய்வு செய்துள்ளது. இசுலாமிய மக்களின் வீடுகளில் அவரவர் வசதிக்கேற்ப புழங்குபொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான இசுலாமிய மக்களிடையே அத்தர் பயன்படுத்தும் பழக்கம் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது. இசுலாமிய மக்கள் பிறவற்றைவிட இறைவனை வழிபடும் தொழுகைக்கு முதன்மையிடம் தருகின்றனர். இசுலாமிய மக்களின் நம்பிக்கைகளிலிருந்து சடங்குகள் வரை அனைத்திலும் அவர்களின் சமயம் சார்ந்த பக்திநெறி முதன்மைப்படுத்தப்படுகிறது. பிற சமயங்களைப் போன்று இசுலாமியச் சமயத்திலும் பிரிவினைகள் காணப்படுகின்றன.

## References

Bhakthavachala Bharathi, (2019) Panpaattu Maanidaviyal Virivaakkappatta Pathippu, Trichy, India

Kandhasamy, A. (2013) Palanthamilarin Palakavalakangal, International Institute of Tamil Studies, Chennai, India.

Keeranur Jaaheeraja, (2012) Meenkara theru, Ethi Veliyedu, Pollachi, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License